TAMIL ... 20 DEC 1982 MADRAS-600 009

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

வியாழக்கிழமை, 1982, மார்ச் 11.

மாசி 27, துன்மதி—திருவள்ளுவர் 2013.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :

"உற்றான் அளவும் பிணியளவும் காலமும்
கற்றான் கருதிச் செயல்"

மருத்துவ நூலைக் கற்றவன், நோயுற்றவனுடைய வயது முதலியவற்றையும் நோயின் அளவையும் காலத்தையும் ஆராய்ந்து செய்ய வேண்டும்.

1. வினாக்கள்—விடைகள் :

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

சேர்வலாறு அணைக்கட்டுத் திட்டம்.

*வினா எண் 461—திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம்: மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேர்வலாறு அணைக்கட்டுத் திட்ட மதிப்பீடு என்ன ?

(ஆ) எப்பொழுது வேலை முடிவடையும் ?

(இ) இந்த அணைக்கட்டுத் தண்ணீரின் முன்னுரிமை பாசனத்திற்கா அல்லது மின்சாரத்திற்கா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

(அ) சேர்வலாறு அணைக்கட்டுத் திட்ட மதிப்பீடு 1977-ம் ஆண்டில் கணித்தபடி ரூ. 2,157 இலட்சங்களாகும். தற்போது உள்ள விலைவாசிக்கேற்ப இத்திட்ட மதிப்பீடு திருத்தப்பட்டு வருகிறது.

(ஆ) இத்திட்டம், 1983 ஆம் ஆண்டு ஜூன் திங்களில் முடிந்து மின் உற்பத்தி துவங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(இ) இத்திட்டம் விவசாயத்திற்கும் மின் உற்பத்திக்கும் இணைந்து அமைக்கப்பட்டாலும் விவசாயத்திற்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இந்தத் திட்டம் 1978—லே 21 கோடி ரூபாய் மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. தற்போது எங்கே போய் நிற்கும் என்று சொல்ல முடியாது. ஏனென்றால் நாளுக்கு நாள் விலைவாசி ஏறிக்கொண்டே இருக்கிறது. வேலை காலாகாலத்தில் முடியாத நிலை ஏற்பட்டால் பல கோடி ரூபாய் அதிகமாகச் செலவு செய்யப்பட்டு பணம் விரையம் ஏற்படும். ஆகையால் இந்த வேலையை சீக்கிரமாக் முடிப்பதற்கு அரசாங்கம் முன்வருமா? அதற்கு என்ன ஏற்பாடு என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் கூறுவது உண்மை. 1974 ஆம் ஆண்டில் இந்தத் திட்டம் எடுத்துக் கொள்ளப்படும்போது 8.35 கோடி ரூபாய் என்று திட்டமிடப் பட்டது. ஆனால், திட்டம் எடுக்கப்பட்டதே தவிர நிதி ஒதுக்கப் படவில்லை. அதனால் அப்படியே இந்தத் திட்டம் கிடந்தது. இப்போது நாங்கள் வந்த பிறகு அந்தத் திட்டத்தைச் செயல் படுத்த அதற்கான நிதி ஒதுக்கீடு செய்து, விரைவில் முடிக்க வேண்டுமென்று நடவடிக்கை எடுத்து வருகிறோம். 1983 ஜூன் மாதத்திற்குள் இது முடிந்துவிடும்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : துணைத் தலைவரவர்களே, இந்த சேர்வலாறு அணைத் திட்டத்தையும் காரையாறு அணைத் திட்டத்தையும் இணைக்கும் வகையில் ஒரு டன்னல் திட்டம் உருவாக்கப்பட்டு பல ஆண்டுகள் ஆகின்றன. அந்த டன்னல் திட்டத்தை துரிதமாக எடுத்து செயல்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ? அதன் மூலம் என்னென்ன பலன் ஏற்படும் என்பதை அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, சேர்வலாறு திட்டம் பற்றித்தான் என்னிடம் தகவல் இருக்கிறது. வேறு ஒரு திட்டத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். அந்த விவரம் தற்போது என்னிடம் இல்லை.

சைக்கிள் டயர், டியூப் தயாரிக்கும் தொழிலுக்கு அரசு உதவி.

*வினா எண் 462—திரு. என். எஸ். வி. சித்தன்—மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழகத்தில் சிறு தொழில்களாக Small Sc le indust ies இயங்கும் சைக்கிள் டயர், சைக்கிள் டியூப் தயாரிக்கும் தொழிற் சாலைகள் கடந்த சில ஆண்டுகளாகவே நட்டத்தில் இயங்கு கின்றனவா ?